**நிலச்சீர்திருத்த இயக்குநர்அவர்களின் செயல்முறைகள்**
**சேப்பாக்கம், சென்னை-05.**
பிறப்பிப்பவர் : **திரு அ.சங்கர், இ.ஆ.ப.,**

**செயல்முறை எண்.** அ1/6414/2023 (நி.சீர்), நாள் 30.07.2024.

**பொருள்:** பொதுப்பணி – தமிழ்நாடு அமைச்சுப்பணி தொகுதி IV – நிலச்சீர்திருத்த ஆணையர் அலுவலகம், சேப்பாக்கம், சென்னை-5. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் தொகுதி-4 அறிவிக்கை எண்.07/2022, நாள் 30.03.2022 மூலம் இளநிலை உதவியாளர் பணியிடம் ஒதுக்கீடு செய்யப்பட்டது – பணிவரன்முறை செய்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது.

**படிக்க:**

1. தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம், செயலாளர் அவர்களின் கடித எண். 1956/PSD-B1/2023, நாள் 14.08.2023.
2. இவ்வலுவலக செயல்முறை ஆணை எண். அ1/6414/2023 (நி. சீர்), நாள் 30.08.2023.
3. திரு. இரா.விஜயன், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியேற்பு மனு நாள் 04.09.2023.
4. திருமதி. ந.அபிராமி, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியேற்பு மனுநாள் 04.09.2023.
5. திருமதி. து.சௌமியா, இளநிலை உதவியாளர் அவர்களின் பணியேற்பு மனுநாள் 04.09.2023.
6. திரு. சே.சௌக்கர், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியேற்பு மனுநாள்04.09.2023.
7. திரு. சு.சக்திவேல், இளநிலை உதவியாளர் அவர்களின் பணியேற்பு மனுநாள் 13.09.2023.

*********

**ஆணை:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நடத்தப்பட்ட தொகுதி - 4 (நேரடி நியமனம்) அறிவிக்கை எண். 07/2022, நாள் 30.03.2022- இன்படி காலிப்பணியிடங்களுக்கு தேர்ந்தெடுக்கப்பட்டு, நிலச் சீர்திருத்த துறைக்கு பார்வை 1- இல் காணும் கடிதத்தின்படி இளநிலை உதவியாளர்களாக 5 (ஐந்து) நபர்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டு, பார்வை 2-இல் காணும் செயல்முறைகளின்படி, பணிநியமனம் செய்யப்பட்டு கீழ்க்கண்டவாறு 5 நபர்களும் பணியில் சேர்ந்துள்ளனர்.

| வ. எண். | பெயர் | பணியில் சேர்ந்த நாள் |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1. | திரு. இரா.விஜயன் | 04.09.2023 மு.ப |
| 2. | திருமதி. ந.அபிராமி | 04.09.2023 மு.ப |
| 3. | திருமதி. து.சௌமியா | 04.09.2023 மு.ப |
| 4. | திரு. சு.சக்திவேல் | 13.09.2023 மு.ப |
| 5. | திரு. சே.சௌக்கர் | 04.09.2023 மு.ப |

இவர்களது பணியினை தமிழ்நாடு அமைச்சுப் பணியில் இளநிலை உதவியாளர்கள் பணியமைப்பு பட்டியலில் குறிப்பிட்டுள்ளபடி, இளநிலை உதவியாளர்கள் பணியேற்ற நாள் முதல் இளநிலை உதவியாளர் நிலையில் பணிவரன்முறை செய்து ஆணையிடப்படுகிறது. மேலும், பணிவரன்முறையினைத் தொடர்ந்து பட்டியலில் காணும் இளநிலை உதவியாளர்கள் அவர்கள் பணியேற்ற நாள் முதல் இளநிலை உதவியாளர் பதவியில் தகுதிகாண் பருவம் துவக்கியும், தனியர்களது தகுதிகாண் பருவம், பணியேற்ற நாள் முதல் மூன்று (3) ஆண்டு காலம் தொடர் பணிக்காலத்தில் இரண்டு ஆண்டு காலம் தகுதிகாண் பருவமாக நிர்ணயம் செய்து ஆணையிடப்படுகிறது.

தகுதிகாண் பருவக் காலத்தில் தனியர்கள் நிர்ணயிக்கப்பட்ட தேர்வுகள் / பயிற்சிகளில் தேர்ச்சி பெற வேண்டும் என்றும் ஆணையிடப்படுகிறது.

மேற்படி, தேர்வுகளை தகுதிகாண் பருவம் துவக்கப்பட்ட நாள் முதல் ஐந்து ஆண்டு காலத்திற்குள் தேர்ச்சி பெறத் தவறும்பட்சத்தில், எவ்வித முன்னறிவிப்புமின்றி தனியர்கள் பணியிலிருந்து நீக்கப்படுவார்கள் என ஆணையிடப்படுகிறது.

மேலும், தனியர்களின் பணிவரன்முறையானது மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம், சென்னை மற்றும் மதுரை கிளைகளில் நிலுவையில் உள்ள வழக்குகளின் மீதான நீதிப்பேராணை தீர்ப்புக்கு உட்பட்டது.

ஒம்/- அ. சங்கர்
நிலச்சீர்திருத்த இயக்குநர்

<u>பெறுநர்</u>

1. திரு இரா.விஜயன், இளநிலை உதவியாளர்
2. திருமதி ந.அபிராமி, இளநிலை உதவியாளர்
3. திருமதி து.சௌமியா, இளநிலை உதவியாளர்
4. திரு சு.சக்திவேல், இளநிலை உதவியாளர்
5. திரு சே.சௌக்கர், இளநிலை உதவியாளர்

} நிலச் சீர்திருத்தத் துறை, சேப்பாக்கம், சென்னை-05.

நகல்

1. சம்பளக் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை-8.
2பட்டியல்.
3. 'அ1'இருப்புக் கோப்பு.

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

30/7/24

உதவி ஆணையர்-1
நிலச் சீர்திருத்த இயக்குநருக்காக

30/7/2024